1989 அக்டோபர் 31]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலுள்ள மணலி சாலையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் கழிவுநீர் அகற்றும் அமைப்பு ஏதும் தற்போது இல்லை. அதற்காட ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்படவிருக்கிறது.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கே தேங்கியுள்ள கழிவுநீர் ஒரு ஏரி போல காட்சியளிக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அந்த இடத்தைப் பார்வையிட்டார்கள். மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கே துர்நாற்றம் அதிகமாக அடிக்கிற காரணத்தினால் பொதுமக்களுடைய ஆரோக்கியம் கெடுகிறது. விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

சிகம்பட்டி கிராமத்தில் டிரான்ஸ்பார்மர் அமைத்தல்.

*458. **திரு. எம். முத்தையா:**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஓட்டப்பிடாரம் தொகுதி, குதிரைக்குளம் பஞ்சாயத்து சிகம்பட்டி கிராமத்தில் ஒரு டிரான்ஸ்பார்மரை அமைத்து தெரு விளக்குகள் சரியாக எரிய அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1989 அக்டோபர் 31

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

ஓட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட சீகம்பட்டி கிராமத்தில் நிலவி வந்த குறைந்த மின் அழுத்த நிலையை மேம்படுத்த ரூ. 75,500 செலவில் சி. குமாரெட்டியபுரத்தி பகிர்மான மின்மாற்றி ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் மின்அழுத்த நிலைமை சீரடைந்துள்ளது.

திரு. எம். முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஆனால் அதே தொகுதியில் சிலர் புதிதாக கிணறு வெட்டி அதற்கு பம்பு செட் வைத்து மின் இணைப்புக் கேட்டால் கொடுப்பதில்லை. இது பற்றி மாவட்ட தலைமைப் பொறியாளரிடம் பல தடவைகள் முறையிட்டும், அவர் எதுவும் செய்வதாக இல்லை. ஆகவே நீங்கள் எங்கள் தொகுதியின் மீது கருணை வைத்துப் புதிதாக கிணறு வெட்டி புதிதாக பம்பு செட் வைத்து மின் இணைப்பு கேட்பவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கும்படி உத்தரவிடும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது பல்வேறு விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று உடனடியாக அதிகாரிகளை அழைத்து உத்தரவிட்டு கடந்த வாரமே கோவில்பட்டி, ஓட்டப்பிடாரம் போன்ற பகுதிகளில் இதுநாள்வரை மின் இணைப்புக் கொடுக்கப்படாதவர்களுக்கெல்லாம் மின் இணைப்புக் கொடுக்கப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல இடங்களில் 70 மீட்டர் அளவில் உள்ள கிணறுகளுக்கு மின் சாரம் வழங்கப்படும் என்று நம்முடைய அரசாங்கம் அறிவித்த சுற்றுகையின் அடிப்படையிலேகூட, சில இடங்களில் டிரான்ஸ்பார்மர்களில் லோட் இல்லாததனாலே பல டிரான்ஸ்பார்மர்களில் 4 சர்வீஸ்கள் 70 மீட்டருக்குள் இருந்தும்கூட அந்த இடங்களிலே

1989 அக்டோபர் 31]

எல்லாம் இந்த சலுகைகள் பெறப்படமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகையினால் அப்படிப்பட்ட இடத்தில் முன் உரிமை கொடுத்து அந்த டிரான்ஸ்பார்மர்களை மாற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் இது போல் இருக்கிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் நிச்சயமாக முன் உரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் பகுதியில் அனல்மின் நிலையம்

* 3326. **திரு. க. சொ. கணேசன் :**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டம் பகுதியில் கிடைக்கும் நிலக்கரியைப் பயன்படுத்தி ஜெயங்கொண்டம் பகுதியில் அனல் மின் நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநில அரசு திட்டமாக, ஒரு சுரங்கம் வெட்டி அதிலிருந்து கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் ஒரு அனல்மின் நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகளை அரசு ஆராய்ந்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(10.05)

திரு. க. சொ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் பகுதியில் நல்ல தரமுள்ள நிலக்கரி கிடைப்பதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் மலைஜாதியினரும் மேல் ஜாதியினரும் வசிக்கிறார்கள். வானத்தை நம்பி வாழ்கிற மக்கள் பெரும்பாலும் அங்கே வசிப்பதால் அந்த அனல் மின் நிலையத்தைச் சீக்கிரம் அமைக்கும் திட்டம் அரசிடம் உண்டா என அறிய விரும்புகிறேன்.